பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 18 திங்கட்கிழமை 04.09.2023 கதிர் 297

# ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் நிரந்தர பிரதிநிதியும் இங்கு தேவை

## நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்து

(ந.லோகதயாளன்.)

ஐ.நா மனித உரிமைப் பேரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களையும் அங்கே இலங்கை வழங்கும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்க மனித உரிமைப் பேரவையின் ஓர் பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என ஐ.நா வதிவிடப் பிரதிநிதியிடம் யாழ்ப்பாணம்நாடாளுமன்றஉறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்தார்.

ஐ.நா.வதிவிடப் பிரதிநிதிக்கும் தமிழ் கட்சிகளின்பிரதிநிதிகளிற்கும்இடையில் இருதினங்களின் முன்பு 'சூம்' வழியாக இடம்பெற்ற சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்.

"ஐ.நா.மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைதொடர்பிலேபலவிடயங்கள் தீர்மானமாக எட்டப்படுகின்றன. ☞2

## இது ரகசியம் அல்ல!

வடக்குக் கிழக்கு கடும் வறட்சியில் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் நிலையில், மலையகத்தில் கடந்த சில தினங்களாகவே நல்ல மழை பெய்து வருகின்றது. இந்தக் காலத்தில் அங்கு ஏற்கனவே நல்ல மழை பெய்திருக்கவேண்டும். ஆனால் பெய்யவில்லை. அதனால் நீர்த் தேக்கங்களில்எல்லாம்நீர் அடிமட்டத்துக்குச் சென்றுவிட்டிருந்தன. பலநீர்த்தேக்கங்களின் அடியில் மூழ்கிப்போயிருந்த முன்னைய கட்டடங்கள், வீதிகள் எல்லாம் வெளியே தெரியுமளவிற்கு தண்ணீர் வற்றிப்போயிருந்தது. இப்போது அந்த நீர்த்தேக்கங்களுக்கான நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் எல்லாம் கனமழை பெய்திருக்கின்றது. அதனால் இனிக் கொஞ்ச நாளைக்கு நீர்மின் உற்பத்தி தடைப்படாமல் இருக்கும் என்று நம்பலாம்.

மலையத்தில்பெய்துவந்த மழை நேற்றுத் தலைநகர் கொழும்பில் ஒரு பிடி பிடித்தது. காலையில் இருந்து பெய்த மழையால் கொஞ்சநேரத்திலேயே கொழும்பு ☞2

# செப் 21 ஐ.நாவில் ஜனாதிபதி உரை

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துக்கொண்டு உரையாற்றவுள்ளார். குறித்தகூட்டம்செப்டம்பர் 18 முதல் 26 வரை நடைபெறவுள்ளது. இதில் செப்டம்பர் 21 ஜனாதிபதி உரையாற்றுவார்.

பன்முகத்தன்மைகொண்ட உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளவும், நிலையான வளர்ச்சிக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் முன்னேற்றுவதற்கான வழிகளைத் தேடவும் இந்த மாநாடு உலகளாவிய தலைவர்களை ஒன்றிணைக்குமென ☞2

# நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தீர்க்கமான முடிவெடுக்கவேண்டும்

## உயர் நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தெரிவிப்பு

நீதிமன்றங்களுக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் சவால்விடுக்கப்படும் நிலையில்நீதிபதிகளும்சட்டத்தரணிகளும் மிகவும் தீர்க்கமான முடிவுகளைஎடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ்.

சாய்ந்தமருதில் நேற்று நடைபெற்ற நூல்வெளியீடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றங்கள், சட்டத்துறைகள்சவால்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சில பேர்வழிகள் நீதிமன்றத்தினையும், சட்ட ஆட்சியையும் கேள்விக்கு உட்படுத்துகின்றமையை நாம்அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அவ்விதமானசகாப்தத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இளம் நீதிபதிகள், சட்டத்தரணிகள்மிகவும்தீர்க்கமான முடிவுகளை எடுக்க ☞2

# வரலாறு தெரியாது அமைச்சருக்கு அறியாமையால் கருத்துரைக்கிறார்

## சிவசேனைத் தலைவர் சச்சி அறிக்கை

(ந.லோகதயாளன்.)

வரலாறு தெரியாது விளாசுகிறார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கா என சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தெற்கிலங்கையில் சைவக் கோயில்கள் இருக்கின்றன. எனவே வடக்குக் கிழக்கு இலங்கையில் புத்த விகாரைகளை அமைத்தால் என்ன? என்று அறிவை அடகு வைத்த பின்பு வினவுகிறார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கா.

புத்தர் இலங்கைக்கு வந்த நாளில் முருகனுக்குத் தைப்பூச விழா. இலங்கை மக்கள் அனைவரும்கூடி எடுத்த விழா. மாணிக்கக் கங்கையில் விழா. இலங்கையின் ஆதிகுடிகள் சைவர்களே புத்தரை வரவேற்றார்கள். தைப்பூச நாளில் வரவேற்றார்கள்.

கதிர்காமத்தில் இருந்து காங்கேயன்துறை வரை நீண்ட, சிலாவத்தில் இருந்து மட்டக்களப்பு வரை அகன்ற, 66 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள இலங்கைத் தீவுமுழுவதிலும்பல்லாயிரம் சைவக் கோயில்களே இருந்தன. இலங்கை சிவபூமி.

புத்தர் வரும் பொழுது இருந்தவை சைவக் கோயில்கள்.படிப்படியாக ☞2

# 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டே தீருவேன்

## சஜித் திட்டவட்டம்

உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்பது பொய். 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவது நிச்சயமென எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் உயி ருக்கு அச்சுறுத்தல் காணப் படுவதால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டாரெனமேற் கொள்ளப்படும் பரப்புரை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும் தரப்புப் பிரதிநிதிகள் குழு 'கோயபல்ஸின்' கொள்கையை நடைமுறைப்படுத்தி புதிய புரளியை உருவாக்குகின்றனர். அவர்கள் ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டிட்டியிட்டால் சஜித் போட்டியிடமாட்டார் எனக் கூறுகின்றனர்.

நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாரானபோது கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஒப்பந்தங்களைச்செய்து கொண்டு என்னைத் தோற்கடிக்கச் சதி செய்தவர்களே இப்போது இந்தப் பொய்ப் பரப்புரையையும் செய்கிறார்கள்.

நான் கண்டிப்பாக அடுத்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன். இதில் மாற்றுக்கருத்து இடமில்லை. ஆனால்ஜனாதிபதிதேர்தலில் போட்டியிட நான் உயிருடன் இருக்கவேண்டும். நான் சாவிற்கு அஞ்சும் ☞2

# மாத இறுதியில் சினோபெக் விநியோகத்தை விரிவாக்கும்

மசினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட் இம்மாத இறுதியில் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தி சில்லறை வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்குமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சக்திமற்றும்எரிசக்தி அமைச்சில் சினோபெக் எரிபொருள் மற்றும் சுத்திகரிப்புநடவடிக்கைகள்தொடர்பில்அந்நிறுவனத்தின் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல்தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட்நிறுவனஅதிகாரிகளுடன் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் முன்னேற்றம், இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடல் மற்றும் நாடு முழுவதுமான செயற்பாடுகளின் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது.

சினோபெக்நிறுவனத்தின் புதியசுத்திகரிப்புநிலையத்தை அம்பாந்தோட்டையில் நிறுவுவதற்கான உறுதிப்பாட்டை அந்நிறுவன அதிகாரிகள்வழங்கியுள்ளனர்.

நாடுமுழுவதுசினோபெக் நிறுவனக் கிளைகள் இவ்வருட இறுதிக்குள் திறக்கப்படவுள்ளன. அதன் முதல் கிளை அண்மையில் கொழும்பில்திறக்கப்பட்டதுடன், உள்நாட்டு சந்தையில் காணப்படும் எரிபொருள் விலையை விட குறைத்தே விற்பனைநடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை இலங்கை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ள நிலையில் அந்த துறைமுகத்தின் ☞2

# தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை இந்தியாவால் என்றும் ஏற்கமுடியாது

## அந்நாட்டு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென தெரிவித்துள்ள இந்திய அயலுறவுத்துறைஅமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் அண்மையில் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் முழுமையான விசாரணை அறிக்கையைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர்குப்புசாமிஅண்ணாமலைக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அனுப்பிவைத்துள்ள பதில் கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 4 இந்திய மீனவர்கள் மீது ஓகஸ்ட் 22 இலங்கை கடல் கொள்ளையர்களால்தாக்குதல் நடத்தப்பட்டன.

ஆர்காட்டுத்துறையில் இருந்து தென்கிழக்கில் 22 கடல் மைல் தொலைவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீதான இந்த தாக்குதலில் 5 இலட்சம ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் சேதமடைந்திருந்தன.

குறித்த சம்பவம் தொடர்பாக தாம் அனுப்பியிருந்த கடிதத்திற்கு இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் அனுப்பியுள்ள பதில் கடிதத்தை பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் குப்புசாமி அண்ணாமலை வெளியிட்டார்..

இந்தக்கடிதத்தில், ஓகஸ்ட் 22 தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை இலங்கைக்கான இந்திய உயர்ஆணையரகம் உடனடியாக இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் ஆழ்ந்த கவலையையும் இந்திய உயர்ஆணையரகம் தெரிவித்தது.

மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துமாறும் தகவல்களை வழங்குமாறும் இலங்கை அரசிடம் இந்திய உயர்ஆணையரகம் கோரியுள்ளது. இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளையும் ☞2

# காய்ச்சலுக்கு சிகிச்சைபெறச் சென்ற சிறுமியின் கை அகற்றப்பட்ட அவலம்

## யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவத் தவறு காரணமா?



(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் காய்ச்சலுக்குச்சிகிச்சைபெறஅனுமதிக்கப்பட்ட 8 வயது சிறுமிக்கு ஒரு கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட அவலம் ஏற்பட்டுள்ளது. இதுமருத்துவத் தவறால் ஏற்பட்டதா என்பது தொடர்பில் விசாரணை நடத்த குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமி ஒருக்கு ஊசி மருந்து செலுத்துவதற்காக பொருத்தப்பட்ட கனிலாவினால் (kanila) இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது.

"கனிலாசெலுத்தியபோது அல்லது மருந்து செலுத்தும்போது, கையில் நாடி சேதமடைந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இதனால் கைக்கு குருதி செல்ல முடியாமல் கை செயலிழந்துள்ளது. இதன் காரணமாகக் ☞2

# யாருக்கு வாக்களிப்பது என்பதை 60% மக்கள் முடிவு செய்யவில்லை

## இப்படிச் சொல்கிறார் மைத்திரிபால சிறிசேன

பெரும்பான்மையான மக்கள்இன்னும்ஓர்அரசியல் கட்சியை மையப்படுத்தி அணிதிரளவில்லை. 60 சதவீதமான மக்கள் வரவிருக்கும் தேர்தலில் எந்தக் கட்சிக்கு வாக்களிக்கப் போகிறோம் என்பது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றையதினம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் நடைபெற்றது. அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்கவுக்குஅழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும் அவர் பங்கேற்றிருக்கவில்லை. எனினும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இராஜதந்திரிகளும் பங்கேற்றிருந்தனர்.

இங்கு உரையாற்றியபோதே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2024 ஒக்டோபர் மாதத்திற்குள் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்யுமாறு கோரப் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வெள்ளக்காடாக மாறியது. பல இடங்களிலும் வீதிகளில் முழுங்கால் அளவிற்கு வெள்ளம் பாய்ந்தோடியது. நல்லவேளையாக நேற்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் வெள்ளத்தின் தாக்கம்குறைவாக இருந்தது. இருப்பினும் கொழும்பு கோட்டை, மருதானை, பஞ்சிகாவத்தை, பொரளை, குருந்துவத்தை, கொம்பனித் தெருபோன்றபகுதிகளில்கடும் வெள்ளம் ஏற்பட்டு அச்சத்தை ஏற்படுத்தியது. அந்தளவிற்குக் குறுகிய நேரத்தில் கனமழை பொழிந்தது. கொழும்பு வாசிகளின் நல்ல நேரமோ என்னவோ காலையில் மட்டுமே மழை பெய்ததால் நண்பகலுக்குள் வெள்ளம் வடிந்தோடிவிட்டது. அதனால் நிலமை சீர்ப்பட்டது. இருந்தாலும் மழை வெள்ளம் உள்ளே புகுந்த கடைகள் எல்லாம் இன்று திறக்கப்படும்போது பெரும் அல்லோலகல்லோலமாக இருக்கப் போகின்றது.

..................

இலங்கை ஆசியாவின் அதிசயம் என்று சொன்னாலும் சொன்னார்கள், பல சமயங்களில் அது அப்படித்தான் நடந்துகொள்கிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக நடந்த மக்கள் கிளர்ச்சியான அரகலய போராட்டத்தின்போது பியானோ வாசித்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் பதவி நீக்கப்பட்டிருக்கின்றார். அதேநேரம் கோட்டாபயவோ எகிப்துக்கு சுற்றுலாச் சென்றுள்ளார்.

2022 ஜூலை மாதம் மக்கள் ஜனாதிபதி மாளிகையைச் சூழ்ந்து அதனைக் கைப்பற்றினார்கள். கோட்டாபய ராஜபக்ஷ மாளிகையில் இருந்து தப்பியோடிப் பதுங்கியிருந்தார். அவர் எங்கே பதுங்கியிருந்தார் என்பதே தெரியாதிருந்தது.

அவர் நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கினார், வரிசை யுகத்தை உருவாக்கினார், மக்களைப் பட்டினிச் சாவை நோக்கித் தள்ளினார் என்கிற குற்றச்சாட்டுக்களாலேயே அவரைப் பதவியிலிருந்து அகற்ற மக்கள் போராட்டத்தைக் கையில் எடுத்தனர். சுமார் ஒருமாதகாலமாகஜ்னாதிபதி மாளிக்கைக்கு அருகே காலி முகத் திடலில் மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வந்தார்கள். அதனை அடக்க அவர் முற்பட்டபோது திமிறி எழுந்த மக்கள் கூட்டம் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிவளைத்துக் கைது செய்தது.

இந்த மக்கள் எழுச்சியை, கிளர்ச்சியைக்கண்டு அஞ்சிய அரச படைகள் அப்போது அமைதிகாத்தன. மக்களுக்கு எதிராகத்தங்கள் அதிகாரத்தை உயர்த்த அவை பயந்தன. மக்களின் போராட்டங்கள் நியாயமானவை என்று படையினரில் பலர் நினைத்தனர். அப்படிப்பட்ட நிலையில்தான் ஜனாதிபதி மாளிகைமக்களின்கைகளில் விழுந்தது. அப்படி மக்கள் அந்த மாளிகையைக் கைப்பற்றியேபோது ஜனாதிபதி மாளிகையில் இருந்த பியானோவில் பாட்டு வாசித்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்தினார் என்கிற குற்றச்சாட்டில் கொன்ஸ்டபிள் ஆர்.எம்.டிதயாரத்னவெள்ளிக் கிழமை பதவி நீக்கப்பட்டுள்ளார். நீண்ட விசாரணைக்குப் பின்னர் இந்த நடவடிக்கைஎடுக்கப்பட்டதாக் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேநேரம் மக்களால் விரட்டயடிக்கப்பட்டமுன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எகிப்துக்குச் சுற்றுலாச் சென்றுள்ளார். பதவிலியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பின்னர் அவர் சுற்றுலாச் செல்லும் மூன்றாவது இடம் இது. தன்னுடையஓய்வுகால் மகிழ்ச்சிக்காக அவர் இந்தச் சுற்றுலாவிற்குச்சென்றுள்ளார் என்றுதெரிவிக்கப்படுகின்றது. எகிப்தில் அவர் நைல் நதியில் சொகுசுக் கப்பல் பயணம் ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளார் என்று அறிய வந்தது. எகிப்து சுற்றுலாவில் பிரபலமான இந்த நைல்நதி சொகுசுப் பயணம் அலாதியானது.

ஆக மொத்தத்தில் மக்களால் குற்றவாளி என விரட்டியடிக்கப்பட்ட ஒருவர் தனது ஓய்வுக் காலத்தில் வெளிநாட்டுச்சுற்றலாக்களில் மகிழ்ச்சியில் திளைக்க, அந்த நபரால் பாதிக்கப்பட்டு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களில்ஒருவராகத்தன்னை உணர்ந்துஅதைப்பியானோ மூலம் வெளிப்படுத்திய ஒருவர் தனது வாழ்க்கையை எதிர்காலத்தை இழந்து நிற்கிறார்.

அப்படியென்றால்இந்தநாடு ஆசியாவின்அதிசயம்தானே மக்களே!

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## காய்ச்சலுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையை அகற்ற வேண்டியேற்பட்டுள்ளது. அது தொடர்பானமுழுவிசாரணை நடந்து கொண்டிருக்கிறது" எனயாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைபணிப்பாளர் எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 3 இல் கல்வி கற்கும் மல்லாகத்தைச்சேர்ந்தசிறுமி ஒருத்திக்கே இந்த அவலம் ஏற்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 25 இரவு காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக விடுதியில் சேர்க்கப்பட்டார் சிறுமி. மறுநாள்ஓகஸ்ட்26சிறுமிக்கு கனுலா போடப்பட்டுள்ளது. அதற்கூடாக ஓகஸ்ட் 27 மூன்று நேரமும் மருத்து ஏற்றப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 27 இரவு தனக்குக் கையில் பயங்கர வலிய எடுப்பதாகப் பிள்ளை முறையிட்டுள்ளது. அது குறித்து கடமையில் இருந்த மருத்தவர் மற்றும் தாதியரிடம் தாயாரும் முறையிட்டுள்ளார்.

ஓகஸ்ட் 28 காலை கை பெரியளவில் வீங்கியதுடன் மரத்துப்போனதை அடுத்துக் கனுலா அகப்பற்பட்டுள்ளது. சோதித்ததில் கையிற்கு குருதி ஓட்டம் இல்லை எனக் கண்டுபிடிக்கப்பட்டது. மாலை சத்திரசிகிச்சைக் கூடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது. அதனால்பயன்ஏதும்ஏற்படாத நிலையில் செப்டெம்பர் 2 அன்று சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படுவதற்கு முன்பாக சிறுமி பிரபல தனியார் மருத்துவமனை ஒன்றில் 4 நாள்கள் சிகிச்சை பெற்றுள்ளார். வைத்தியசரின் ஆலோசனையின் பெயரிலேயே அங்கிருந்து யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள இரு வைத்திய நிபுணர்கள் தலைமையில் நேற்று விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது என்று வைத்திய சாலைப் பணிப்பாளர் எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வைத்தியநிபுணர்களான பிறேமகிருஸ்னா மற்றும் அருள்மொழி ஆகியோர் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின்செயலாளருக்கும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது இலங்கை அரச தரப்பில் உத்தியோக பூர்வமாகப் பல வாக்குறுதிகளும், உத்தரவாதங்களும் வழங்கப்படுகின்றன. அவை முற்றுப்பெறுகின்றதா இல்லையாஎன்றஉறுதிப்பாடு கிடையாது. எனவே இதனைக் கண்காணிக்கும் நோக்கில்ஐ.நாவின்வதிவிடப் பிரதிநிதி ஒருவர் இங்கே தங்கியிருப்பதுபோன்று ஐ.நா மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதி ஒருவரும் தங்கியிருக்க வேண்டும்" என்ற கோரிக்கையினை முன்வைத்துள்ளேன்.

இதேநேரம் இலங்கையில் தற்போது தொல்பொருள் ஆராய்ச்சிகளில் அனுபவம் மிக்கவர்கள் தொல்லியல்த் திணைக்களத்தில் மட்டுமே இருப்பதனால் கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்விற்கும் அவர்களின் உதவியையே பெறவேண்டியுள்ளது. இதனால்இவ்வாறானசந்தர்ப் பத்திற்கு ஐ.நாவின் அகழ்வாராய்ச்சியாளர்களும் பங்குகொள்ள வேண்டும் குறைந்தபட்சம் பார்வையாளர்களாகவேனும்பிரசன்னம்இருக்கவேண்டும்எனக் கோரியுள்ளேன்" என்றார் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

## யாருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளது. இருப்பினும் தற்போது வரையில் பெரும்பான்மையானமக்கள் அரசியல் கட்சியொன்றை மையப்படுத்தி அணிதிரளவில்லை. 60சதவீதமான மக்கள்யாருக்குவாக்களிப்பது என்பது குறித்து தீர்மானம் எடுக்கவில்லை.

ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு இந்த 60 சதவீதமான மக்களின் ஆதரவைஎவ்வாறுபெறுவது என்பது தொடர்பில் எமக்கு முன்னால் பெரும் சவால் காணப்படுகின்றது.

இந்தச்சவாலில் வெற்றி பெறுவதாகஇருந்தால்முதலில் கட்சிக்குள் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மத்தியில் மிகவும் இறுக்கமான நட்பும், சகோதரத் துவமும், அன்பும் காணப்பட வேண்டும்.

நாங்கள் தற்போது இனிய மாலைப்பொழுதில் இணைந்திருக்கின்றோம். இந்த இணைவும் மகிழ்ச்சியும் தொடர வேண்டுமாக இருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியமைக்கவேண்டும்.

அவ்வாறு ஆட்சி அமைக்கமுடியாதுபோனால், எமது கட்சியும், எமது ஆதரவாளர்களும், சதாரண பொதுமக்களும் துன்பப்படுகின்ற நிலைமையே தொடரும் - என்றார்.

ஸ்ரீலங்;கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவரும்அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்இந்தஆண்டுக்கான தொனிப்பொருள்மிகப்பொருத்தமானதாக உள்ளது. மற்றக் கட்சிகளில் இணைவதற்கு முன், கட்சிக்குள் ஒன்றுபடவேண்டும். அவ்வாறு ஒன்றுபடுவதன் ஊடாகவேஇந்தநாட்டின்எதிர்காலத்தினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் சீரமைக்கலாம். பழையகொள்கைகளை மறுசீரமைத்து இளைஞர்கள், பெண்கள், உள்ளிட்டவர்களைஉள்ளீர்க்கும் புதிய கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும் - என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்தேசியஅமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

எந்தக்கட்சியில்பிளவுகள் இல்லை? ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டுள்ளது, ஜேவிபி பிளவுபட்டுள்ளது, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பிளவுபட்டுள்ளது. லங்கா சமசமாஜக் கட்சியும் பிளவுபட்டுள்ளது. எமதுபலத்தையும் இந்த மேடையில் காண்பித்துள்ளோம். தற்போது ஒன்றுபட்டுள்ளோம். ஏனைய கட்சிகளுடன் எமக்குகாணப்படும்வித்தியாசத்தையும்நாம்ஒன்றிணைந்து காண்பித்துள்ளோம். இது மேலும் விரிவடைய வேண்டும். எமது ஆதரவாளர்களும் ஒன்றிணைந்து மாற்றத்திற்கு தயாராக வேண்டும் - என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்பொதுச்செயலாளர் தயாசிறிஜயசேகரஉரையாற்றுகையில்தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் ஒரு பெரும் மாற்றம் வரும், அதற்கு கிராமத்தில் நீங்கள் தயாராகவேண்டும். கட்சியின் உயர்மட்டத்தில் நாம் ஒன்றிணைந்துவிட்டோம்.

எமது கட்சியின் தலைவர் மிகவும் பொறுமையுடன் இருந்து அனைத்துத்தரப்பினரையும் ஒன்றிணைத்துவிட்டார். ஏனையவர்களையும் ஒன்றிணைக்கவுள்ளார். ஆகவே உயர்மட்டத்தில் நாம் ஒன்றிணையும் செயற்பாட்டை ஆரம்பித்து விட்டோம். கிராம மட்டத்திலிருந்துஅனைவரும் ஒன்றிணைந்து கட்சியை பலப்படுத்த வேண்டும்.

அத்துடன், அம்பாந்தோட்டைக்கு சீனக் கப்பல் வருவதாகச்சொல்கிறார்கள், மறுபுறம் ஏவுகணைகளை செயலிழக்கச்செய்யக்கூடிய கப்பல் இந்தியாவிலிருந்து வரும்என்கிறார்கள். இலங்கை ஒரு போர் மண்டலமாக மாறுகிறது. நாம் ஒரு பொதுவான நிலைப்பாட்டை எட்டவேண்டும், நாங்கள் ஆட்சியாளர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் எதிர்க்கட்சியாக இருக்க வேண்டும். இதனை மக்கள் தீர்மானிக்க வேண்டும் - என்றார்.

அமைச்சர் மஹிந்த அமரவீரஉரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

அடுத்த சில மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களைக்கொண்டஅரசியல் கட்சியாக இருக்கப்போவது ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி. இது நடைபெறப் போகின்ற விடயமாகும். அதேநேரம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையில்புதியஆட்சியை உருவாக்குவதற்காக அனைவரையும் ஓர் அணியில்கைகோர்க்குமாறு நான் பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன் - என்றார்.

## தமிழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படுகின்றன என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாக அண்ணாமலை தெரிவித்தார்.

## 2024 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோழை அல்லன். எந்தச் சவாலையும் எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளேன். நான் ராஜபக்ஷக்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவில்லை.

நாட்டின் அபிவிருத்திக்கு பணம் தேடும் வழி பற்றி எவரும் கவலைப்பட வேண்டாம். அது எனது பொறுப்பு. தீவுகளிலோ, வெளிநாட்டு நிறுவனங்களிலோ, அல்லது எமது நண்பர்களின் தொழில்களிலோ நாம் முதலீடுசெய்யவில்லை. இந்த நாட்டில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கையை வலுப்படுத்த முதலீடு செய்கிறோம் - என்றார்.

## செப் 21....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின்பொதுச்சபைக்காக நியூயோர்க் செல்வதற்கு முன்னதாக செப்டம்பர் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கியூபாவின் ஹவானாவில் நடைபெறும் ஜீ77 உச்சி மாநாட்டில் ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

## வரலாறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்தர்கள் விகாரர்களைக் கட்டத் தொடங்கினீர்கள். அப்பொழுது இருந்த கோயில் களே இன்று வரை தொடர்கின்றன. புதிதாக யாரும் தென்னிலங்கையில் சைவக் கோயில்களைக் கட்டவில்லை. பழையசைவக் கோயில்களையேதிருப்பணி செய்து புதுப்பிக்கின்றார்கள்.

மதவாச்சிக்கு வடக்கே ஈரற்பெரிய குளத்தில் பிள்ளையாருக்கு அருமையான கருங்கல் கோயிலை இக்காலத்தில் எழுப்பியவர் சைவத்தமிழர் அல்லர். பௌத்தமதத்தவராகிய சிங்களவர். நீங்கள் போய்ப் பாருங்கள். மூஷிக வாகன... எனத் தொடங்கும் கணபதித் தெய்யோ மந்திரத்தைத் தன் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்காத புத்த சிங்களத் தாய் ஒருவர் இருந்தால் எனக்குச் சொல்லுங்கள்.

புத்தர் வரும் முன்பும் வந்தபின்பும்பலநூற்றாண்டுகளுக்கு இலங்கையில் விகாரைகள் இல்லவே இல்லை. ஏதோ போகட்டும் என்றுசைவர் ஆகியநாங்கள் விகாரைகளைக்கட்ட உரிமம் தந்தோம்.

விசயன் வந்த பின்பும் அநுராதபுரம் சைவ சமயப் பிரதேசம். ஆண்ட அரசர்களின்பெயர்கள்:சிவன், மூத்த சிவன், மகாநாகன். முற்று முழுதாகச் சைவத் தமிழ்ப் பெயர்கள்.

சைவர்களின் தயவில் கட்டியவையே இப்பொழுது தென்னிலங்கையின் புத்த விகாரைகள்.

புத்த விகாரைகளைக் கட்டினாலும் அங்கே சிவ லிங்கம்வேண்டும். திருமால் வேண்டும் இலட்சுமி, சரசுவதி, துர்க்கை, காளி வழிபட வேண்டும் வைரவர் வழிபட வேண்டும். தமிழ்ப் பெண்ணாகிய பத்தினியை வழிபட வேண்டும். எனவே நீங்கள் விகாரைக்குள்ளே சைவக் கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறீர்கள்.

ஏனென்றால் உங்களுக்குத் தெரியும் இலங்கை சிவ பூமி. இச் சிவ பூமியில் சைவக் கோயில் இல்லாத இடம் இருக்க விடக்கூடாது எனப் புத்தராகிய நீங்களே நினைக்கிறீர்கள்

சைவத்தமிழ் பெண்ணான பத்தினியைப் புத்த விகாரைகளுள்அமைத்தவன் முதலாம் கயவாகு.

இலங்கையில் நீங்கள் கணபதி தெய்யோ என்று நாளும்மனதாலும்உடலாலும் நெக்குருகி வழிபடுகின்ற போற்றுகின்ற பிள்ளையார் வழிபாட்டைப் புத்தரிடையே பரவலாக்கியவன் நரசிம்ம பல்லவனின்யானைப்படைத் தளபதி மாறவர்மன். வாதாபி சென்று வெற்றியோடும் பிள்ளையார்சிலைகளோடும் இலங்கை வந்தவன்.

அதேநரசிம்மபல்லவன் தெற்கே தேவேந்திர முனையில் தென்னாவரம் சிவன் கோயிலைப்பல்லவபாணியில் கட்டுவித்தான் என்பதை நான் சொல்லவில்லை. மேலைநாட்டுவணிகப்பயணி ஒருவர்சொல்கிறார். அறிவை அடகு வைத்து விளாசுகின்ற உங்களுக்கு இந்தச் செய்தி தெரிய வாய்ப்பில்லை

முதலாம்பராக்கிரமபாகு, மகன் விக்கிரமபாகு, மகன் இரண்டாம் கயவாகு யாவரும் சைவத்தைப் பேணிய அரசர்கள். சைவத்தமிழ்ப் பாண்டிய சந்திரகுல வம்சத்தினர் எனக் குல வமிசமே பூசா வழியே கூறுவதைப் படித்தது உங்களுக்கு நினைவில்லையா?

கந்தளாயில் சதுர் வேதி மங்கலத்தில்அடைக்கலமாகிய இரண்டாம் கயவாகுவை நீங்கள்மறந்துவிடமுடியுமா?

அதற்குப் பின், இரண்டாம் நான்காம் ஆறாம் பராக்கிரமபாகு காலங்களில் இலங்கையின் தென் முனையில் தென்னாவர நாயனார் கோயிலையும் அங்கு சதுர்வேதி மங்கலங்களையும் அம்மன்னர்கள் ஆதரித்ததைச் செப்பேடுகளாகக் கல்வெட்டுகளாகக் காணலாமே. நீங்கள் படிக்கவில்லையா?

-வழிபாட்டிடங்களைப் பாதுகாக்கும் மூச்சிங்கள தம்பதெனியா, கம்பளை, கோட்டை மன்னர்களின் கல்வெட்டுகளில் முதலில் புத்தவிகாரை, பின் சதுர்வேதி மங்கலம், பின் சைவத் தேவாலயம் யாவையும் முறையாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என எழுதியதை நீங்கள் படிக்கவில்லையா?

சீனப் பயணி செங்கோ வழிபட்டுத்தமிழில்போற்றிக் கல்வெட்டுஎழுதிய கோயிலே தென்னவரம். அந்தக் கல்வெட்டுஇன்றும்கொழும்பு அருங்காட்சியகத்தில் இருக்கிறதே நீங்கள் பார்க்கவில்லையா?

மொரொக்கோ நாட்டுப் பயணி முகமதியரான இபன் பட்டுட்டாகண்டு ஆரவாரித்த கோயிலன்றோதென்னவரம். பயணக் குறிப்புகளைப் படிக்கவில்லையா?

இலங்கையில் தமிழ்ச் சைவர்கள் எவராவது புத்த விகாரையை இடித்த வரலாறை நீங்கள் சொல்ல முடியுமா?

ஆனால் கோட்டை அரசன் மாயாதுன்னையின் மகன் முதலாம் இராசசிம்மன் எத்தனை புத்த விகாரைகளை இடித்தான்? தலதா மாளிகையை இடிக்க முயன்றான் - என அங்கே இன்றும் ஓவியம் இருக்கின்றமைஉங்களுக்குத் தெரியாதா?

தென்னிலங்கையில் உள்ள சைவக் கோயில்கள் ஆதியான கோயில்கள். அவற்றை இப்பொழுது யாரும் கட்டவில்லை. அங்கு சைவர்கள் இருப்பதால் அக் கோயில்கள் தொடர்கின்றன.

வடக்கு கிழக்கில் பௌத்தர்கள் 1948 வரை 4%. அவர்களுக்கான புத்த விகாரைகள் இருந்தன.

சைவத்தமிழ்த் தாயகத்தில் அத்துமீறிய அரச குடியேற்றங்களின் பின்பு அங்கும் விகாரைகளைப் புதிதாக அமைத்தீர்களே!

பௌத்தர்கள் இல்லாத இடத்தில்புத்தவிகாரைகளைக் கட்ட வேண்டாம். சைவத் தமிழர்களின் மனத்தை நோகடிக்க வேண்டாம். இவ்வாறு வட மாகாணப் புத்த பீடத் தலைவரும் நாக விகாரைப் புத்த பிக்குவும் உங்களுக்கு எடுத்துக் கூறிய செய்தி வந்த அச்சுமை காயவில்லையே. அதற்குள் அவசரப்பட்டு உங்கள் அறியாமையை விளாசுகிறீர்களே.

தென்னிலங்கையில் சைவக் கோயில்கள் இருப்பதால் தமிழர் பகுதிகளில் புத்த விகாரைகளைக் கட்ட வேண்டும் என்று சொல்லுகின்றஉங்களுக்கும்அறிவை அடகுவைத்தபுத்தர்களுக்கும் சொல்கிறேன் -- தென் இலங்கையில் சைவக் கோயில்கள்அநாதியானவை. அவற்றை இன்றைய தமிழர் தாயகச் சைவர்கள் அமைக்கவில்லை.

தவறான வரலாற்றைத் திணிக்காதீர்கள். போரில் வென்ற வீறாப்பில் புத்த மேலாதிக்கத்தைத் திணிக்காதீர்கள்.

கத்தோலிக்கரும் கிறித்தவரும் கடந்த சில நூற்றாண்டுகளில் போரில் வென்ற பின்பு சைவக் கோயில்களை உடைத்தார்கள். கிறித்தவத் தேவாலயங்களைக் கட்டி எழுப்பினார்கள்.

கத்தோலிக்கரும்கிறித்தவரும் சைவத்தமிழ்த் தாயகத்தில் சைவர்களை அழிக்க முயன்றது போல், இப்பொழுது போரில் வென்ற புத்தர்களாகிய நீங்களும் சைவத்தமிழ் தாயகத்தில் சைவர்களை அழிக்க முயல்கிறீர்கள்.

சைவர்களை அடக்க ஒடுக்க அழிக்க நினைக்காதீர்கள். வெற்றி பெற மாட்டீர்கள் என்றுள்ளது.

## நீதிபதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

லோட் டெனின் நான்கு புத்தகங்களை எழுதினார். அவர் தனது சட்டத்துறை நற்பண்புதொடர்பானபுத்தகத்தில் நீதிமன்ற அவமதிப்பு பொன்று உங்களுக்கு முன்னால்நடைபெறுமாயின் அந்த விடயத்தினை நீங்களாகவேஎடுத்துஅவ்வழக்கினை விசாரணைக்கு உள்ளாக்கி தீர்ப்பை வழங்க முடியும் என்று குறிப்பிடுகின்றார்.

அவர்அவ்வாறுகூறுவது நீதிபதிகளின் தனிப்பட்ட நலனுக்காகஅல்ல. அவ்வாறு நீதிபதிகள்நடவடிக்கைகளை முன்னெடுக்காது விட்டால் நீதித்துறையின் நம்பிக்கை மற்றும் சுயாதீனம் என்பன கேள்விக்குறியாகிவிடும் என்பதனாலாகும்.

## மாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாகவே எதிர்காலத்தில் சினோபெக் நிறுவனம் உள்நாட்டுக்குள்ளிபொருளை கொண்டுவரதிட்டமிட்டுள்ளது - என்றார்.

மேலும், கண்டி, அனுராதபுரம் உட்பட நாட்டின் பல்வேறுமுக்கியநகரங்களில் சினோபெக்தமதுகிளைகளை திறக்க ஆலோசனைகளை நடத்திவருவதாகவும்தெரிவிக்கப்பட்டது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்குமாகாணத்தில் 886 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கி வைப்பு





கிழக்கு மாகாணத்தில் 2 வருடகாலமாக பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்பாடாதிருந்த நிரந்தர நியமனம், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 886 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

ஒரு லட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் உள்ளவர்களுக்கு கடந்த காலத்தில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆனால் பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் ஒரு லட்சம் வேலைவாய்ப்புக்குள் உள்வாங்கப்பட்ட போதிலும், அவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் இரண்டு வருட காலமாக வழங்கப்படாமல் தற்காலிக நியமனத்திலே பணியாற்றி வந்தனர்.

இந்நிலையில் ஆளுநர் செந்தில் தொண்டமான், பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களை மாகாண சபைக்குள் உள்வாங்கி அவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துக்கொண்டனர். (05)

# பிம்புத் நிதி நிறுவனத்தினது உரிமம் ரத்துச் செய்யப்பட்டது

இலங்கை மத்திய வங்கியின் நாணயசபையால் பட்டியலிடப்பட்ட பிம்புத் நிதி நிறுவனத்தின் உரிமம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட பலபொதுவான அறிவுறுத்தல்கள், விதிகள் தொடர்ச்சியாக மீறப்பட்டதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மூலதன மட்டம் இல்லாமை, தரம் குறைந்த சொத்துகள், தொடர்ச்சியாக பதிவாகியுள்ள இழப்புகள் காரணமாக நிறுவனத்தின் நிதி நிலைமை மேலும் பலவீனமடைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கமைய, வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில், பிம்புத் நிதி நிறுவனத்தின் உரிமம் இரத்து செய்யப்படுவதுடன், அவர்கள் நிதி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## மன்னார் மாவட்ட தமிழரசுக் கட்சிக்கு புதிய நிர்வாகம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவு சனிக்கிழமை இடம்பெற்றது.

கட்சியின் நிர்வாக செயலாளர் சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் தலைமையில், கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் இந்தத் தெரிவு நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச கிளைகளினதும் நிர்வாகிகளின் பிரசன்னத்தோடு நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, மன்னார் மாவட்ட கிளையின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், செயலாளராக சூசையப்பு துரம், பொருளாளராக நானாட்டான் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் பரஞ்சோதி , துணைத்தலைவராக ஜெயக்குமார் ,துணைச் செயலாளராக செல்வராணி சோசை தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை மாவட்ட கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக 10 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.(05)



# மறைந்த மயோன் முஸ்தபாவுக்கு கல்முனையில் ஜனாஸா தொழுகை

மறைந்த முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சரும், ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தருமான கல்விமான் எம்.எம்.எம். முஸ்தபாவுக்கு (மயோன்) மறைவான காயிப் ஜனாஸாத்தொழுகையும், விசேட துஆப் பிரார்த்தனையும் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகையின் பின்னர் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அல்ஹாஜ் மௌலவி டி.ஆர். நௌபர் அமீனால் ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டு, துஆப்பிராத்தனையும் இடம்பெற்றது.

இதன்போது கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபைத்தலைவர் டாக்டர் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ.அஸீஸ் கலந்து கொண்டு நினைவு உரையாற்றுகையில் -

மக்களுக்காக அரசியலில் பயணத்தை ஆரம்பித்தவர் மறைந்த முன்னாள் உயர்கல்விப்பிரதிய்மைச்சர் அல்ஹாஜ் எம்.எம்.மயோன் முஸ்தபா. தனது செல்வத்தின் மூலமும் தனது அரசியல் பதவியின் மூலமும் மக்கள் பணிக்காக உயர்வைக்கண்டும், பல சிரமங்களை எதிர்கொண்டும் இறுதி வரை மக்களுக்கு உதவியைச் செய்தவராவார்.

கல்முனை பிரதேச மக்களுக்கு பல திட்டங்களை மக்கள் நலனுக்காக அறிமுகஞ்செய்தவர். இப்பிரதேச மாணவர்களின் நலன்கருதி கணனி கல்வியைக் கொண்டு வந்தவர். இதன் மூலம் பலர் பயன்பெற்றனர். மேலும், வெளிநாடு செல்வோருக்கு பயன்பெறவேண்டி வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை எமது பிரதேசத்தில் அமைத்து அதில் எமது பிரதேச மக்களும் நாட்டு மக்களும் பயன்பெற்றதுடன், எமது பள்ளிவாசலுக்கு முன்னாலுள்ள பொதுச்சந்தையினை ஆரம்பித்து வைத்து பங்களிப்புச் செய்தவராவார். எல்லோருடனும் மிகவும் என்றும் அன்புடன் இருந்தவர் இவருக்காகப் பிரார்த்திப்போம் - என்றார்.

இதன் போது முன்னாள் உயர்கல்விப் பிரதியமைச்சர் அல்ஹாஜ் எம்.எம்.மயோன் முஸ்தபாவின் புதல்வர் ரிஸ்லி முஸ்தபா மற்றும் குடும்பத்தினர் அதிகளவிலான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் மறைந்த முன்னாள் உயர்கல்விப்பிரதியமைச்சர் அல்ஹாஜ் எம்.எம்.மயோன் முஸ்தபா பல்வேறு சேவைகள் புரிந்து மக்கள் மனதில் நீங்காத ஓர் அரசியல்வாதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஊழல் மிகு டீலை 24 மணித்தியாலத்துக்குள் நாட்டு மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்

## வலவாஹெங்குனுவெவே தம்மரத்தன தேரர்



பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்து நாட்டு மக்களுக்கு நிவாரண ரீதியில் எரிபொருள் விநியோகிப்பதாக ஆரம்பத்தில் கூறி எரிபொருள் நிறுவனத்தை ஆரம்பித்தனர். இருப்பினும் ஆரம்பித்த 24 மணித்தியாலங்களுக்குள் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில் இருக்கும் ஊழல் மிக்க டீலை நாட்டு மக்கள் புரிந்துகொண்டுள்ளனர் என மிஹிந்தலை விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனுவெவே ஸ்ரீ தம்மரத்தன தேரர் தெரிவித்தார்.

மிஹிந்தலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்து எமது நாட்டு மக்களுக்கு நிவாரண ரீதியில் எரிபொருள் விநியோகிப்பதாக ஆரம்பத்தில் கூறியிருந்தனர். நிவாரணம் தருவதாக கூறி எரிபொருள் நிறுவனத்தை ஆரம்பித்தனர்.

இருப்பினும் ஆரம்பித்த 24 மணித்தியாலங்களுக்குள் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களை வளர்த்துவிடவே அரசியல்வாதிகள் உள்ளனர் என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று நிறுவனங்களுடன் டீல் வைத்த பிறகு அவர்கள் தமது செயற்பாடுகளை இங்கு முன்னெடுக்கிறார்கள்.

'தேவையான அளவுக்கு விலையை அதிகரித்து தருகிறோம். நீங்கள் விரும்பிய விலைக்கு விற்பனை செய்து, அதில் எமக்கு பாதியை வழங்குங்கள்' என அவர்கள் கூறியுள்ளனர். இந்த சூட்சுமத்தை 24 மணித்தியாலங்களுக்குள் புரிந்துகொண்டுள்ளோம். நாட்டு மக்களும் புரிந்து கொண்டுள்ளனர்.

இது பாரியதொரு ஊழல் மிக்க டீல் ஆகும். பல்வேறு நிறுவனங்களின் பெயர்கள் இருந்தாலும் சில நிறுவனங்கள் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் உறவினர்கள், நண்பர்களின் பெயர்களில் இந்த நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு பணம் எங்கிருந்து கிடைக்கப் பெறுகிறது. அது கறுப்பு பணமாகும்.

மக்களுக்கு என்ன நடந்தாலும், அது தொடர்பில் அவர்கள் கவலை கொள்வதில்லை. அவர்களுக்கு பணம் கிடைத்தால் போதும். நாடாளுமன்றத்தில் இருக்கும் இந்த 225 பேரும் நாட்டு மக்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்தி தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும், தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் முயற்சிக்கிறார்கள்.

ஒருவேளை உணவை பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு நாட்டு மக்களைக் கொண்டு வந்தவர்களே இவர்கள் அனைவரும் என்பதை புரிந்துகொண்டவர்கள், அவர்களின் அரசியல் மேடைகளுக்கு செல்லமாட்டார்கள். இவ்வாறு செல்பவர்கள் மனிதர்கள் அல்லர். எனவே, அவர்களும் ஒன்று; இவர்களும் ஒன்று என்பதை புரிந்து கொள்ளுங்கள். - என்றார். (05)

# இனப்பிரிவினையை ஏற்படுத்த இந்த ஆட்சி திட்டம் தீட்டுகின்றது

## சாணக்கியன் குற்றச்சாட்டு



பௌத்த மக்களையும் தமிழ் மக்களையும் ஒரு முறுகல் நிலைக்கு உட்படுத்தி தாங்கள் ஆட்சிக்கு வரலாம் என்ற எண்ணத்தில் ஜனாதிபதி செயற்படுகிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆட்சியை கைப்பற்றும் முதல்கட்டமாக வடக்கு கிழக்கிலே சில சம்பவங்களைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் திருகோணமலையில் ஜனாதிபதியும் இந்தியாவும் செய்த சில ஒப்பந்தங்களைப் பற்றி சில ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இவ்வாறாக இந்த விடயங்களை அவதானிக்கும்போது முல்லைத்தீவு மாவட்டத்திலே குருந்தூர் மலையிலே மாபெரும் எதிர்ப்பு பேரணியிலேயே தமிழ் மக்கள் ஈடுபட்டனர்.

பிக்குமார் அவ்விடத்தில் முரண்பட்டனர். அதனைத் தொடர்ந்து திருகோணமலையில் ஆளுநருடைய அலுவலகத்துக்குள் அடாவடித்தனமாக பிக்குமார்கள் சென்றனர்.

அந்த விகாரை கட்டுவதை ஒரு பெரிய பூகம்பமாக தெற்கிலே பரபரப்பாகச் செய்திகள் பரப்பினர். இவ்வாறான சில விடயங்களில் இனமுறுகளுக்கான ஆரம்ப நிலையை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. -எனத் தெரிவித்துள்ளார். (05)

# ஹக்கீம் கலந்துகொண்ட அஷ்ரப் நினைவு ஏற்பாடு









முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவரும் மறைந்த எம்.எச்.எம் அஸ்ரப்பின் 23 ஆவது நினைவு தினம் எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் திகதி சாய்ந்தமருதில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அது தொடர்பாக அம்பாறை மாவட்ட பல்வேறு பிரதேசங்களினதும் மத்திய குழு உறுப்பினர்களுடனான கலந்துரையாடல்கள் அம்பாறை மாவட்டம் பூராக நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக கல்முனையில் இது சம்பந்தமான கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரிஸ் தலைமையில் கல்முனை காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான சட்டமானி ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். மேலும் இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். சி.எம். பைசல் காசிம், முன்னாள் பிரதியமைச்சர் எம்.எஸ். தௌபீக், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஐ எம் மன்சூர் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தலும் அரசியல் கட்சிகளும்

அண்மையில் பொது அமைப்புக்களின் கூட்டமைப்பு ஓர் அறிக்கை விடுத்திருந்தது. அதில் மக்களின் இறைமையை – உரிமையை – உறுதிப்படுத்தும் வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆனால், அந்தக் கோரிக்கைக்கு எதிராக நாடு அடுத்த அரசுத் தலைவர் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகி வருவது கண்கூடாகத் தெரிகின்றது. அரசியல் கட்சிகள் அதற்கான தயார்ப்படுத்தல்களை இப்போதே செய்யத் தொடங்கிவிட்டன.

அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் யார் போட்டியிடப்போகிறார்கள் என்பதை அரசியல் கட்சிகள் இப்போதே அறிவிக்கின்றன. அந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகக் கட்சியை மறுசீரமைக்கின்றன. தமது மாவட்டக் கிளைகளைப் உத்வேகப்படுத்துகின்றன. தேசிய மாநாடுகளை நடத்தித் தொண்டர்களை உற்சாகப்படுத்துகின்றன. யாரோ கூட்டணி வைத்துக்கொண்டு தேர்தலை எதிர்கொள்ளலாம் என்று ஆலோசிக்கின்றன.

இவ்வாறு அரசுத் தலைவர் தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்கள் அரசியல்வாதிகள் மத்தியில் பரபரப்பாகிக் கொண்டிருந்தாலும், அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அது குறித்து இன்னும் உத்தியோகபூர்வமாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாக அமையும் என்று அவர் சில பொது மேடைகளில் ஏற்கனவே கருத்துத் தெரிவத்திருக்கிறார். ஆனால் தேர்தல் தொடர்பிலோ அதில் தான் போட்டியிடுவது தொடர்பிலோ அவர் எந்தக் கருத்தையும் இன்னும் நேரடியாகத் தெரிவிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அவரே போட்டியிடுவார் என்று அவரது அரசியல் சகாக்கள் தெரிவித்து வருகின்றார்கள் எனினும் அவர் இன்னும் அதனை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அவரது ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எல்லாக் கட்சிகளுமே அரசுத் தலைவர் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகி வருகின்றன.

ஆக, மக்களின் கோரிக்கையான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துங்கள் என்பதை உதாசீனம் செய்துவிட்டு அரசுத் தலைவர் தேர்தலை நடத்துவதிலேயே அரசியல்வாதிகள் மும்முரமாக இருக்கின்றார்கள். இங்கு நடப்பது மக்களாட்சி, மக்களுக்காகத்தான் ஆட்சியாளர்கள் என்றெல்லாம் வாய்கிழியக் கத்தினாலும் மக்களின் தேவைகளுக்கோ விருப்புக்களுக்கோ அரசியல்வாதிகள் மதிப்புக் கொடுப்பதில்லை என்பதை இது மற்றொரு தடவை நிரூபித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஐப்பசி மாதம் அளவிலேயே அரசுத் தலைவர் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால் அதற்கு முன்கூட்டியே அதனை நடத்துவதற்கும் அரசியல் கட்சிகள் தயாராக இருக்கின்றன. அப்படி முன்கூட்டியே தேர்தலை நடத்தவேண்டுமானால் அதற்கு அரசமைப்புத் திருத்தம் அவசியம். மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரசுத் தலைவர் ஒருவரே குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகத் தேர்தலை அறிவிக்க முடியும் என்று அரசமைப்புக் கூறுகின்றது. ரணில் விக்கிரமசிங்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுத் தலைவர் அல்லர் என்பதால், அவரால் முன்கூட்டியே தேர்தலை அறிவிக்க முடியாது. எனவே முன்கூட்டித் தேர்தலை நடத்துவதானால் அரசமைப்பில் திருத்தம் செய்வது அவசியம். அப்படித் திருத்தம் மேற்கொள்வதாயின் அதற்கு ஆதரவளிக்கத் தான் தயாராக இருப்பதாக ஜேவிபி அறிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றது.

ஆக மொத்தத்தில் அரசுத் தலைவர் தேர்தலை நடத்துவதில் கட்சிகள் ஓரணியாகத் திடமாக நிற்கின்றன. தற்போதைய அரசுத் தலைவருக்கு மக்கள் ஆணை இல்லை என்பதால் விரைவில் மக்களால் தெரிந்தெடுக்கப்படும் சட்டபூர்வமான ஓர் அரசுத் தலைவர் நாட்டில் வேண்டும் என்கிற நோக்கத்துக்காக அரசுத் தலைவர் தேர்தலை நடத்துவதில் அவை அக்கறை கொண்டிருப்பதாகக் காட்டப்பட்டாலும், அதே மக்களால் நடத்துமாறு கேட்கப்படும் உள்ளாட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எவரும் தாயராக இல்லை என்பதே இந்த நாட்டின் அவலம்.





# உயர்கல்வி தடை- மனித உரிமை மீறல்கள்; முடிவிலா துயரத்தில் ஆப்கான் பெண்கள்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆப்கானிஸ்தானில் பெண்களின் மேலான அடக்குமுறையின் தொடர்ச்சியாகப் பெண்களின் கல்லூரிப் படிப்பை தடை செய்ததோடு, பெண்கள் பயிலும் பல்கலைக்கழகங்களை மூட கடந்த வருடம் தாலிபான்கள் உத்தரவிட்டனர்.

2023 ஜூலை 4, ஆப்கான் நாடு முழுவதும் உள்ள அழகு நிலையங்களை ஒரு மாதத்திற்குள் மூட வேண்டும் என்று தாலிபான்கள் உத்தரவிட்டுள்ளனர். இது பெண்களை பொது வாழ்க்கையிலிருந்து வெளியேற்றுவதற்கான சமீபத்திய நடவடிக்கையாகும்.

தற்போது, பொது வெளியில் பெண்களை நடமாடவிடாமல் செய்து, பொருளாதார ரீதியாகவும் கல்வி அறிவு ரீதியாகவும் முடக்கி அவர்களை அடிமைப்படுத்த கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்கள் தாலிபான்கள்.



ஆப்கானிஸ்தானை தாலிபான்கள் மீண்டும் கைப்பற்றி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அன்றிலிருந்து இன்று வரை அங்கு பெண்களுக்கு எதிரான தலிபான்களின் ஒடுக்குமுறைகள் தீவிரமடைந்து கொண்டே வருகின்றன. அமெரிக்கப் படை விலகலின் பின் ஆப்கானில் இருபாலர் பயிலும் கல்விநிலையங்களில்




திரைச்சீலை கொண்டு மாணவர்களையும் மாணவிகளையும் பிரிக்கவேண்டும் என அந்நாட்டு தலிபான் அரசு கடந்த வருடம் கூறியிருந்தது.

நீண்ட காலமாக அவலத்தோடு வாழும் மக்களின் துயரங்களுக்கு முடிவு கானல் நீராகவே புலப்படுகிறது. ஆப்கான் பெண்கள் பொதுவெளிக்குச் செல்ல பல தடைகள் விதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது அதிகரித்து வருவதாக வாஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது. பதின்ம வயதுப் பெண்களிடையே மனச்சோர்வு விகிதம் அதிகரித்து வருகிறது.

### தாலிபான்களின் பழமைவாதம்

பழமைவாதக்கருத்துகளைநடைமு-றைப்படுத்தி 1996 முதல் 2001வரை ஆப்கானிஸ்தானைத் தலிபான்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அப்போது ஆண் துணை இல்லாமல் பெண்களால் வெளியே வர முடியாது. அவர்கள் கல்வி கற்கக்கூடாது, வாகனம் ஓட்டக் கூடாது எனப் பல தடைகள் இருந்தன. பெண்களை வீட்டுக்குள் முடக்கும் பல கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இவற்றை மீறும் பெண்கள் பொது இடங்களில் நிறுத்தப்பட்டு இழிவுபடுத்தப்பட்டனர். வன்முறைத் தாக்குதலுக்கும் உள்ளாகினர். இஸ்லாமிய ரியத் சட்டத்துக்கு உட்பட்டே பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்படும் என்று தாலிபான்கள் கூறியிருப்பது பெண்களின் நிலை குறித்த அச்சத்தை மேலும் அதிகரித்துள்ளது.

2021 ஒகஸ்ட்டில் மீண்டும் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியதில் இருந்து, உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு பெண்கள் செல்லத் தடை விதித்தனர். பூங்காக்கள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்லவும் தடை விதித்தனர். அரசு சாரா நிறுவனங்களில் பணிபுரிய பெண்களுக்குத் தடை விதித்தனர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியவும் பெண்களுக்கு தடை விதித்தனர். ஆயிரக்கணக்கான பெண்கள் அரச வேலைகளில் இருந்து நீக்கப்பட்டனர். அரச பணிகளில் இருக்கும் பெண்களுக்கும் கடும் கட்டுப்பாடுகள் விதித்தனர்.

### சோவியத் கால ஆப்கான்

ஆப்கான் வரலாற்றின் படி 1973 முதல் 1978 வரை 'முகம்மது தாவூத் கான்' ஆப்கானியக் குடியரசின் அதிபராவார். இந்த இடதுசாரி அரசும் உட்பிரச்சினை, எதிர்ப்புகள் என்று பல்வேறு கடுஞ்சிக்கல்களை எதிர்கொண்டது. இதன்பின் ரஷ்யா அமெரிக்காவிற்கு இடையிலான பனிப்போரில் ஆப்கானிஸ்த்தானும் அப்போது அகப்பட்டுக்கொண்டது.

1979 இல் ஜிம்மி காட்டர் தலைமையிலான அமெரிக்க அரசு, அவரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜிபிக்னீவ் பிரசின்கி (Zbigniew Brzezinski) கொடுத்த ஆலோசனையினால் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ (ISI) மூலம் இடதுசாரி எதிர்ப்பாளர்களான முஜாகிதீன்களுக்கு உதவி அளித்தது.

பல்வேறு பன்னாட்டு அழுத்தங்களினாலும், சுமார் 15,000 துருப்புக்களை முஜகதீன்களுடனான போரில் இழந்ததனாலும் சோவியத் துருப்புகள் 10 ஆண்டுகளின் பின்னர் 1989 இல் ஆப்கானித்தானில் இருந்து வெளியேறின.

### சோவியத் வெளியேற்றத்தின் பின்னர்

அமெரிக்கா போரினால் சிதைந்து போன ஆப்கானித்தானைச் சீரமைக்க உதவவில்லை. சோவியத் அரசால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் அங்கு இன்றும் உள்ளன. அத்துடன் சோவியத் ரஷ்யா தொடர்ந்தும், அதிபர் நச்யிபுல்லாவிற்குத் தமது ஆதரவை வழங்கியது. ஆயினும் 1992 இல் அவர் வீழ்த்தப்பட்டார். சோவியத் படைகள் வெளியேறியமை, இந்த இடதுசாரி அரசின் வீழ்ச்சிக்கும், தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றவும் உறுதுணையாக இருந்தது.

பல சிறுபான்மையினரும், அறிவுஜீவிகளும் போரின் பின்னர் ஆப்கானிஸ்த்தானைவிட்டு வெளியேறினர். சோவியத் வெளியேற்றத்தின் பின்னரும், முஜாகிதீன்களின் பல உட்பிரிவுகளுக்கிடையில் போர்கள் மூளலா-யின. இதன் உச்ச கட்டமாக 1994 இல் 10,000 பொதுமக்கள் காபூலில் கொல்லப்பட்டனர். இக்காலகட்டத்தில் தாலிபான் அமைப்பு எழுச்சி பெற்றது. இவர்கள் பெரும்பாலும் எல்மான்ட், கந்தகார் நிலப்பகுதிகளைச் சோந்த பஷ்தூண்கள் (Pashtuns) ஆவர்.

### பெண்களை பொது-வாழ்வில் இருந்து அகற்ற முயற்சி

கடந்த ஜூலையில் அழகு நிலையங்களை ஒரு மாதத்திற்குள் மூடவேண்டும் என்று தாலிபான்கள் உத்தரவிட்டுள்ளனர். இது பெண்களை பொது வாழ்க்கையிலிருந்து வெளி யேற்றுவதற்கான சமீபத்திய நடவடிக்கையாகும்.

இந்த உத்தரவு பெண்களால் நடத்தப்படும் ஆயிரக்கணக்கான வணிகங்களை நிறுத்துவதற்கு கட்டாயப்படுத்தும். இதுதான் பெரும்பாலும் குடும்பங்களுக்கு ஒரே வருமான ஆதாரம். அவர்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கான சில வாய்ப்புகளில் ஒன்றை இந்த உத்தரவு சட்டவிரோதமானதாக்குகிறது.

புருவங்களை வடிவமைத்தல், ஒரு பெண்ணின் இயற்கையான கூந்தலை அதிகரிக்க மற்றவர்களின் தலைமுடியைப் பயன்படுத்துதல் மற்றும் மேக்-அப் பயன்படுத்துதல் ஆகியவற்றை இஸ்லாமுக்கு எதிரான நடைமுறைகள் என்று தாலிபான்கள் கூறி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தடை குறைந்தது 60,000 பெண்களைப் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல பெண்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படும்.

### அடிப்படை உரிமை பறிப்பு

தாலிபன் 2021இல் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதாக சர்வதேச சமூகத்திற்கு பல வாக்குறுதிகளை அளித்திருந்த நிலையில், அதற்கு நேர்மாறாகச் செய்து, அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைத் திட்டமிட்டு ஒடுக்கி வருகின்றனர்.

தாலிபான்களின் இதுபோன்ற நடவடிக்கைகள் ஆப்கானிஸ்தான் பெண்களின் மன ஆரோக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதில் ஆச்சரியமில்லை.

### மனநல பிரச்சினையும் தற்கொலைகளும்

ஆப்கான் பெண்கள் பொதுவெளிக்கு செல்ல பல தடைகள் விதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது அதிகரித்து வருவதாக வாஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது. பதின்ம வயதுப் பெண்களிடையே மனச்சோர்வு விகிதம் அதிகரித்து வருகிறது. ஆப்கானிஸ்தானில் 80% தற்கொலை முயற்சிகள் பெண்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆப்கானிஸ்தான் பெண்கள் மிக அதிக அளவிலான உளவியல் துயரத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மனநல ஆலோசகர்கள் பெண்களை இன்னும் தடை செய்யப்படாத சில செயல்பாடுகளைத் தொடர ஊக்குவித்து வருகின்றனர். ஆனால் தடைகளின் வட்டம் பெரிதாகி வருவதால் பரிந்துரைகள் செய்யமுடியாத நிலையே தற்போது நிலவுகிறது.

மத அடிப்படைவாத தாலிபான்கள் ஆட்சி என்பது ஒரு கொடூரமான நிகழ்வு. இந்த தாலிபான்களின் இரண்டாண்டு கால ஆட்சியில் பசி-பட்டினி-வறுமை ஆகியவற்றில் சிக்கித் தவிக்கிறார்கள் ஆப்கான் உழைக்கும் மக்கள். பெண்களை சமூகப் புறக்கணிப்பு செய்யும் பல்வேறு திட்டங்களை அரங்கேற்றி அவர்களை மனநல பாதிப்பிற்கும் தற்கொலைக்கும் தூண்டிவருகிறது.

கடந்த 20 ஆண்டுகள் வரை அமெரிக்காவின் பிடியிலிருந்த ஆப்கானிஸ்தான் சமீபத்தில் அந்நாட்டை தாலிபன்களிடத்தில் ஒப்படைத்துவிட்டு கிளம்பிய பின்னர் பல்கலைக் கழகங்களை மூடிய தாலிபான்கள் செயலை முழு உலகமுமே கண்டித்துள்ளது.

ஆப்கான் பெண்களின் மேலான அடக்குமுறையின் தொடர்ச்சியாகப் பெண்களின் கல்லூரிப் படிப்பை தடை செய்ததோடு, பெண்கள் பயிலும் பல்கலைக்கழகங்களை மூடவும் தற்போது தாலிபான்கள் உத்தரவிட்டனர். நீண்ட காலமாக அவலத்தோடு வாழும் மக்களின் துயரங்களுக்கு முடிவின்றி தொடர்கிறது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swobpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# 2ஆவது தவணையாக 10 கோடி டொலரை பங்களாதேஷுக்கு செலுத்தியது இலங்கை

பங்களாதேஷ்வங்கியால் வழங்கப்பட்ட 20 கோடி டொலர் கடனில் இலங்கை அரசாங்கம் இரண்டாம் தவணைக்கொடுப்பனவாக 10 கோடி டொலரை மீளச் செலுத்தியுள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசாங்கம் கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் தவணைக் கொடுப்பனவாக 5 கோடி டொலரை பங்களாதேஷுக்கு மீளச்செலுத்தியிருந்தது.

இலங்கை கடந்த 2021 ஆம் ஆண்டு மே மாதம் பங்களாதேஷிடமிருந்து 20 கோடி டொலரைக் கடனாகப்பெற்றது. அதனைக் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மீளச்செலுத்த வேண்டியிருந்த போதிலும், சுமார் 51 பில்லியன் டொலர் வெளியகக்கடன்களை மீளச்செலுத்தமுடியாத நிலையில் (வங்குரோத்து நிலை) இருப்பதாகக் கடந்த ஆண்டு ஏப்ரலில் இலங்கை அறிவித்தது.

அதனையடுத்து அந்த 20 கோடி டொலர் கடனை இலங்கை மீளச்செலுத்துவதற்கு இவ்வாண்டு மார்ச் மாதம் வரை பங்களாதேஷ் கால அவகாசம் வழங்கியது. இருப்பினும் மார்ச் மாதம் கடனை மீளச்செலுத்தமுடியாத நிலையில், மேலும் 6 மாத கால அவகாசத்தைக் கோரிய இலங்கை, முதற்கட்டமாக ஓகஸ்ட் மாதத்திலும், இரண்டாம் கட்டமாக செப்ரெம்பர் மாதத்திலும் கடன்தொகையை மீளச்செலுத்துவதாக உறுதியளித்தது. அதனையடுத்து அந்தக்கடனைமீளச்செலுத்துவதற்கு பங்களாதேஷ் மேலும் 6 மாதங்கள் கால அவகாசத்தை வழங்கியது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஏற்கனவே வாக்குறுதி அளித்ததைப்போன்று கடந்த ஓகஸ்ட் மாதம் 5 கோடி டொலரையும், செப்ரெம்பர் மாதத் தொடக்கத்தில் 10 கோடி டொலரையும் பங்களாதேஷ் வங்கிக்கு இலங்கை மீளச் செலுத்தியுள்ளது. (05)

# கருத்தடை மாத்திரைகளை விற்பனைசெய்த பெண் கைது

சட்ட விரோதமாக கருத்தடை மாத்திரைகளை விற்பனை செய்துவந்த பெண்ணொருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் மாவட்ட உணவு மற்றும் மருந்து பரிசோதனை பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பெண் அனுராதபுரம்-யாழ்ப்பாண சந்திப் பகுதியில் வைத்து அனுராதபுரம் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள பெண் அனுராதபுரத்தில் சேவையாற்றும் பிரபலமான மருத்துவர் ஒருவரிடம் பணிபுரிந்து வருபவர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதான பெண்ணிடம் 7 கருத்தடை மாத்திரைகளை 35 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்பவரை போன்று ஒருவரை அதிரடிப்படையினர் அனுப்பியுள்ளனர். இதன் போதே குறித்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்றம் பெண்ணை எச்சரித்ததுடன் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து விடுதலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# ஒரு கிலோ கோழி இறைச்சியை 850 ரூபாவிற்கு வழங்க முடியும்

## அமைச்சர் கருத்து; இறக்குமதி தொடர்பிலும் ஆராய்வு



கோழிஇறைச்சியை இறக்குமதி செய்வது தொடர்பிலான இறுதி கலந்துரையாடல் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கோழி இறைச்சி உற்பத்தியார்களுடன் இடம்பெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் இந்தியாவில் இருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆனால்ஒருகிலோகிராம் கோழி இறைச்சியை 850 ரூபாவிற்கு நுகர்வோருக்கு வழங்க முடியும் எனவும், அவ்வாறு இருந்தபோதும் தொழில்துறையினர் அந்தச் சலுகையை மக்களுக்கு வழங்குவதில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (05)







# மின்சாரவேலியில் தும்பிக்கை சிக்கி கொம்பன் யானை பரிதாபச் சாவு

## ஆனமடுவ பகுதியில் சம்பவம்

புத்தளம் - ஆனமடுவ செம்புவெள பகுதியில் கொம்பன் யானையொன்று உயிரிழந்த நிலையில் சடலமாக சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் யானை உயிரிழந்திருப்பதை கண்ட அப்பிரதேச மக்கள் புத்தளம் வனஜீவராசிகள்கட்டுப்பாட்டுப் பிரிவினருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து, குறித்த பகுதிக்கு வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் சென்று உயிரிழந்த கொம்பன் யானையை பார்வையிட்டுள்ளனர்.


தும்பிக்கை மின்சார வேலியில்சிக்குண்டதாலேயே கொம்பன் யானை உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள்கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த கொம்பன் யானை 9 அடி உயரம்; அதன் தந்தம் 2 அரை அடி நீளம் எனவும் 40 வயது மதிக்கத்தக்கது எனவும் குறித்த திணைக்களத்தினர் மேலும் குறிப்பிட்டனர். உயிரிழந்த கொம்பன் யானைக்கு மிருக வைத் தியர் இசுருவினால் ஞாயிற்றுக்கிழமை உடற்கூற்று பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதாகவும் இதன்போது அவர்கள் தெரிவித்தனர்.

இந்த யானை மரணித்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வன ஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் கூறியுள்ளனர். (05)

# கண்டி இராசதானிக் காலத்துக்குரிய 6 புராதனப் பொருள்கள் கையளிப்பு

## குனே உஸ்லு தகவல்



இலங்கையின் கண்டி இராசதானிக்காலத்துக்கு உரியவை என்று கண்டறியப்பட்டுள்ள 6 புராதனப்பொருள்களை இலங்கையிடம் மீளக் கையளிப்பதற்கு நெதர்லாந்து அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் தீர்மானம் இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் புரிந்துணர்வைக் காண்பிப்பதாக அந்நாட்டின் கலாசார மற்றும் ஊடக இராஜாங்கசெயலாளர் குனே உஸ்லு தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆராய்ச்சியாளர்களின் பங்கேற்புடன் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் நெதர்லாந்தின் ரிஜ்க்ஸ் அருங்காட்சியகத்தில் உள்ள புராதனப்பொருள்களில் 6 பொருள்கள் இலங்கைக்குச் சொந்தமானவை எனக் கண்டறியப்பட்டது.

அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள தங்கத்தினாலான உறையுடனான உடைவாள், வெள்ளியிலான உறையுடனான உடைவாள், தங்கத்தினாலான கத்தி, இரண்டு பெரிய துப்பாக்கிகள் மற்றும் லெவ்கே திஸாவுக்கு சொந்தமானது என்று நம்பப்படும் துப்பாக்கி ஆகிய 6 புராதனப்பொருள்களும் கண்டி இராசதானிக்காலத்துக்கு உரியவை என்று கண்டறியப்பட்டிருப்பதுடன் அவை 1765 இல் ஒல்லாந்தர்களால் கண்டி அரசமாளிகை கைப்பற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்திய வர்த்தக கம்பனியால் கொண்டுசெல்லப்பட்டவை என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இதனடிப்படையில் இப்புராதனப் பொருள்களை மீண்டும் இலங்கையிடம் ஒப்படைக்குமாறு புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவால் நெதர்லாந்தின் கல்வி, கலாசார மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுக்கு இராஜதந்திர ரீதியிலான கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது.

அவ்வேளையில் காலனித்துவ நாடுகளுக்குச் சொந்தமான புராதனப்பொருள்களை மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்ற கொள்கை ரீதியிலான தீர்மானம் நெதர்லாந்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் விதமாக சுயாதீன குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது.

அதன்படி அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் கோரிக்கை அக்குழுவால் பரிசீலிக்கப்பட்டதுடன், அதனைத்தொடர்ந்து மேற்குறிப்பிட்ட 6 பொருள்களையும் இலங்கையிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கவேண்டும் என்ற சிபாரிஸும் முன் வைக்கப்பட்டது. அதற்கமைய புராதனப்பொருள்களை இலங்கையிடம் மீளக் கையளிப்பதற்கு நெதர்லாந்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் கடந்த ஜுலை மாதம் 6 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்தப் பொருள்களுக்கான சட்டரீதியான உரித்தை இலங்கைக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான ஆவணத்தில் நெதர்லாந்தின் கலாசார மற்றும் ஊடக இராஜாங்க செயலாளர் குனே உஸ்லு கடந்த வாரம் கைச்சாத்திட்டார். அதன்படி அப்பொருள்களை இலங்கைக்கு எடுத்துவருவதற்கான திகதி வெகு விரைவில் தீர்மானிக்கப்படும். அவ்வாறு கொண்டு வரப்படும் பொருள்களை வைத்து விசேட கண்காட்சியொன்றை நடத்துவதற்கான முயற்சிகள் இலங்கை தேசிய அருங்காட்சியகத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதுகுறித்துக் கடந்த வாரம் கருத்து வெளியிட்ட நெதர்லாந்தின் கலாசார மற்றும் ஊடக இராஜாங்க செயலாளர் குனே உஸ்லு, இலங்கைக்குச் சொந்தமான புராதனப்பொருள்களை இலங்கையிடம் மீளக்கையளிப்பதற்கு நெதர்லாந்து அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் தீர்மானம் இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் புரிந்துணர்வைக் காண்பிப்பதாகக் குறிப்பிட்டதுடன், காலனித்துவ நாடுகளின் வசமுள்ள புராதன சின்னங்களை உரிய நாடுகளிடம் கையளிக்கும் நடவடிக்கையின் முதற்கட்டமாக இது அமைந்திருப்பதாகவும் தெரிவித்தார். (05)

# கூரியர் சேவையாளர்மீது தாக்கு தாக்கியவருக்கு விளக்க மறியல்

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளவாலை பகுதிக்கு கூரியர் சேவையில் பொருள்களை வழங்க வந்த இளைஞன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

கூரியர் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர், ஒன்லைனில் பதிவு செய்யப்பட்ட பொருளை வழங்குவதற்காக இளவாலை பகுதிக்குவந்துள்ளார். அவர் குறித்த பொருளை வழங்கிவிட்டு பணம் கேட்டபோது, அவர் வீட்டினுள் அழைத்துச் செல்லப்பட்டு சரமாரியாக தாக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் தாக்குதலுக்கு உள்ளான நபர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தாக்கியவரை கைது செய்த பொலிஸார், மல்லாகம் நீதிமன்றத்தில் அந்நபரை முற்படுத்தியவேளை, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (05)

# இலங்கை சிவப்பு பிடியாணைகளை ஏற்க சர்வதேசப் பொலிஸார் மறுப்பு



சர்வதேசபொலிஸார் தற்போது குற்றவாளிகளுக்கு சிவப்பு பிடியாணைகளை வழங்க மறுத்து வருவதாக குற்றவியல் மற்றும் சட்டப் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கும் கொலைகளுக்கும் இலங்கையில் வழங்கப்படும் தண்டனை மரண தண்டனை என்பதே இதற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொது பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியவை திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான துறைசார் கண்காணிப்புக் குழுவின் முன் அழைக்கப்பட்ட போது குறித்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்தகுழுகூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த குற்றம் மற்றும் சட்டப்பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட -

'பாதாள உலகத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களின் பட்டியலை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அவர்களின் புகைப்படங்கள், வசிக்கும் இடங்கள் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் எண்ணிக்கையையும் நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்.

தற்போது வெளிநாட்டில் இருப்பவர்களிடம் இருந்து 148 சிவப்பு பிடியாணைகளை பெற்றுள்ளோம். அவர்களில் சிலரை இலங்கைக்கு அழைத்து வரவாய்ப்பு கிடைத்தது. 12 பேர் இந்தியாவில் சிறையில் உள்ளனர்.

பாதாளக்குழுக்கள் முழுமையாக வெளிநாட்டில் இருந்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பணத்துக்காக கொலை செய்யும் குழுவையும் நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்.

அவர்களுக்கு உதவுவோர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் .

கடந்த காலங்களில் மோதல்கள் மற்றும் மரணங்கள் தொடர்பான பல வழக்குகள் உள்ளன. இது தொடர்பான கோப்புகள் அனைத்தும் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் சிலரின் செயற்பட்டால் அதிகாரிகள் பின்னடைவை சந்தித்துள்ளனர். அவ்வாறான கொலைகளை நியாயப்படுத்த வேண்டும் என முயற்சிக்கின்றனர்.

ஒருவரைக் கைது செய்யப்போகும்போது, அவர் சட்டவிரோதமான வழிகளில் வெளிநாடு செல்வது இப்போது எங்களுக்குப் பிரச்சினையாகிவிட்டது.

சமீபத்தில், ஹந்தயா என்ற நபர் குற்றம் நடந்த 02 நாள்களுக்குள் டுபாய்க்கு சென்றுள்ளார்.

இவ்வாறான குற்றவாளிகள் தொடர்பில் நாங்கள் சர்வதேச பொலிஸாரிடம் சிவப்பு பிடியாணை கேட்டால், அவர்கள் அதனை மறுக்கின்றனர்.

ஒரு சந்தேக நபரை உங்கள் நாட்டிற்கு மரண தண்டனையை நிறைவேற்ற நாங்கள் ஒருபோதும் கொண்டு வந்து ஒப்படைக்க மாட்டோம் என அழுத்தமாக தெரிவிக்கின்றனர்.

அதேபோல், நாங்கள் கோரிய 05 சிவப்பு அறிவிப்புகளை அவர்கள் நிராகரித்துள்ளனர்-எனத் தெரிவித்துள்ளார். (05)

# கல்வியங்காட்டில் கடத்தப்பட்ட பழவியாபாரி பொலிஸாரால் மீட்பு; 5 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், கல்வியங்காடு பகுதியில் பழ வியாபாரி கடத்தப்பட்ட சம்பவத்தோடுதொடர்புடையவர்கள் என்கிற குற்றச்சாட்டில், கிளிநொச்சி, கனகாம்பிகை குளம், கரடிப்போக்கு சந்தி, பரந்தன் ஆகிய பகுதிகளை சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய ஐந்து இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் கடத்தப்பட்ட நபரும் மீட்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காட்டு பகுதியில் பழ வியாபாரி ஒருவர், வான்ஒன்றில்வந்தகும்பலால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என சனிக்கிழமை உறவினர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வானில் வந்த 12 பேர் அடங்கிய கும்பலே குறித்த வியாபாரியை கடத்திச் சென்றதாக உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட பழ வியாபாரி 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தை நபர் ஒருவரிடம் வாங்கினார் எனவும், அதனை அவர் மீள செலுத்தாத நிலையில் இரு தரப்புக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டுவந்த நிலையிலேயே வியாபாரி கடத்தப்பட்டுள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கடத்தல் கும்பல் கிளிநொச்சியில் மறைந்திருப்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், கிளிநொச்சிக்கு விரைந்த பொலிஸார் ஆட்கடத்தலில் ஈடுபட்ட ஐவரையும் கைது செய்ததோடு, கடத்தப்பட்ட பழ வியாபாரியையும் மீட்டுள்ளனர்.

இந்நிலையில், கைதான நபர்களை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# எரிபொருள் விலையேற்றத்தால் மீனவர் வாழ்வாதாரம் பாதிப்பு

## சுப்பிரமணியம் வேதனை



எரிபொருள் விலையேற்றத்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தொழிலாளர் சமூக கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் எம்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில்இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். டீசல் விலையேற்றத்தால் மீன்பிடித் தொழிலைமுறையாககொண்டு செல்ல முடியாத நிலையில் இருக்கும் இந்த நேரத்தில் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பல மீனவர்கள் மீன்பிடித் தொழிலை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மண்ணெண்ணெயின் விலையை குறைக்குமாறு அல்லது மானியம் முறையில் மீனவர்களுக்கு வழங்குமாறு மீனவ சமூகம் கோரிக்கை விடுத்த போதிலும் அரசாங்கம் இதுவரையில் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என அகில இலங்கை தொழிலாளர் சமூக கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் எம்.வி சுப்பிரமணியம் குற்றம் சுமத்தியுள்ளார். (05)

# ஓட்டோ மரத்தில் மோதி குடும்பஸ்தர் பரிதாப சாவு

வெருகல் - பூநகர் பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியோரத்தில் காணப்பட்ட மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று (சனிக்கிழமை) அதிகாலை 4 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

இந்த ஓட்டோ சாரதி வெருகல் முருகன் ஆலயத்துக்கு சவாரி சென்று, மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது பூநகர் பகுதியில் வைத்து, தூக்க கலக்கத்தில்வீதியோரம்நின்ற மரத்தின் மீது வாகனத்தை மோதியுள்ளார்.

இந்த விபத்தில் ஓட்டோ சாரதி சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

உயிரிழந்தநபர்இரண்டு பிள்ளைகளின் தந்தையான தியாகராசா ஜெயச்சந்திரன் (வயது 41) என்பவர் ஆவார்.

இந்நிலையில், சடலம் திருகோணமலை வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைகளுக்காககொண்டு செல்லப்பட்டதுடன், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# 400 வகை மருந்துகள் அவசரக் கொள்வனவு

400 வகையான மருந்துகள் அவசர கொள்வனவு நடைமுறையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு, வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற 378 வகையான மருந்துகளும் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், வைத்தியசாலைகளில் 77 வகையான மருந்துகள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (05)



# நீதிமன்றத் தடை உத்தரவை மீறி திருகோணமலையில் போராட்டம்

திருகோணமலைநீதிவான்நீதிமன்றமத்தின் தடை உத்தரவை மீறி திருகோணமலை - பெரியகுளம் பகுதியில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சட்ட விரோதமான முறையில் திருகோணமலை பகுதியில் அமைக்கப்படவிருக்கும் விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை குறித்த போராட்டம் இன முறுகலை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் 14 பேருக்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு நிலாவெளி பொலிஸார் திருகோணமலைநீதிவான்நீதிமன்றிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

அதன் அடிப்படையில் இரு தரப்பிலும் தலா 7 பேர் வீதம் 14 பேருக்கு திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதிவான் அண்ணாத்துரை தர்ஷினி சனிக்கிழமை தடை உத்தரவு விதித்துள்ளார். இவ்வாறு தடை விதிக்கப்பட்டவர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்விகாரைஅமைப்பதற்கு ஆதரவாக செயற்படும் பௌத்த பிக்குகள்உள்ளிட்டோரும்இந்தத்தடை உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளவர்களில் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# யாழ். தேர்தல் திணைக்களத்துக்கு புதிய கட்டடம் நேற்றுத் திறப்பு

யாழ்மாவட்ட தேர்தல் திணைக்களத்திற்கான புதிய கட்டடம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நேற்று அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதியுதவியில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கட்டடத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ.எல் ரத்நாயக்க திறந்து வைத்தார். கட்டடத்திற்கானபெயர்பலகை திரையினை தேர்தல்கள் ஆணையாளர்நாயகம்சமன் சிறி ரத்னாயக்க திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் உட்பட தேர்தல்கள் ஆணைக் குழுவின் உத்தியோகத்தர்கள், யாழ் மாவட்ட தேர்தல்கள் அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)




# நாட்டைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பு

## வஜிர அபேவர்தன கூறுகிறார்

நாட்டைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பு எனவும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு தொடர்பில் கட்சி அமைப்பாளர்களுக்கு அறிவிக்கும் கூட்டத்தில்கலந்து கொண்டுகருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணையாவிட்டால், பொருளாதாரரீதியில்பாரியபின்னடைவை சந்திக்கநேரிடும்எனவும்குறிப்பிட்டுள்ளார்.

அனைவரும்ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசியக் கொள்கையொன்றை நாம் உருவாக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் பொறுப்பை புறக்கணித்த போது பின்னடைவையில் இருந்த நாட்டைஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க மீட்டுள்ளார் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (05)

# மீண்டும் ஓர் இனப் படுகொலை இடம்பெறும் சாத்தியம் உள்ளது

## ஆரூடம் கூறுகிறார் சுகாஸ்

தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் நில அபகரிப்பு இடம்பெறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாதுஎனதமிழ்த் தேசியமக்கள்முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம்சுகாஸ்தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்படும் விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் எங்களின் எதிர் காலம் இந்த நிலங்கள். எஞ்சியிருக்கின்ற நிலங்களையும் பெரும்பான்மையினத்தவர்கள் ஆக்கிரப்பு செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தநிலையில், நாட்டில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு காலதாமதம் செய்யாது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். இல்லையென்றால் முள்ளிவாய்க்காய் பகுதியில் இடம்பெற்றஇனப்படுகொலை சம்பவம் போன்று திருகோணமலையிலும் இடம் பெறும் எனவும் தமிழ்த் தேசியமக்கள்முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். (05)

# அம்பாந்தோட்டையில் சினோபெக் நிலையம்



அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படவுள்ளபுதியசுத்திகரிப்பு நிலையத்தில்'சினோபெக்' நிறுவனம் முதலீடு செய்யவுள்ளதாகவும், அதற்கான திட்ட முன்மொழிவு அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படும்எனவும் மின்சக்தி மற்றும்எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை எரிபொருள் விநியோக நிறுவனம் மற்றும்சினோபெக்சுத்திகரிப்பு நிறுவன அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் எரிபொருள் விநியோகநடவடிக்கைகளின் முன்னேற்றம், எரிபொருள் நிரப்பு நிலைய விநியோக முகவர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதன் முன்னேற்றம், சினோபெக் வர்த்தக செயற்பாடுகள் மற்றும் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ள சந்தை நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (05)



# நிதி இராஜாங்க அமைச்சர் வைத்தியசாலையில் சேர்ப்பு

*அவசர சிகிச்சை காரணமாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.*

*உணவு நச்சுத்தன்மை காரணமாக அவர் நோய்வாய்ப்பட்டுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகின்றது.*

*இராஜாங்க அமைச்சர் தற்போது தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)*

# இராணுவ பஸ்ஸுக்குத் தீ வைத்த சம்பவம்: சந்தேகநபர் ஒன்றரை வருடத்தின்பின் கைது

கடந்த வருடம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹானை இல்லத்துக்கு அருகில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்தின்போது இராணுவ பஸ்ஸுக்குத் தீ வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒன்றரை வருடங்களுக்கு பிறகு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கங்கொடவில பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி மிரிஹானையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லத்துக்கு அருகில் இடம்பெற்ற கலவரத்தில் இராணுவ பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டிருந்தது.

இந்தசம்பவம்தொடர்பானவிசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொது முறைப்பாடுபிரிவு குறித்தபஸ்ஸுக்குதீவைத்த பிரதான நபரை கைது செய்வதற்கு ஊடகங்கள் ஊடாக பொதுமக்களின் ஆதரவையும் கோரியிருந்தது. ஒரு வருடம் 5 மாதங்களின் பின்னர், குறித்த நபர் மஹியங்கனை பிரதேசத்தில் இருப்பதாக அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, அவர் தனது மனைவியுடன் மாலபேயில் தற்காலிகமாக தங்கியிருந்த வேளையில் குறித்த இடத்துக்கு சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்தோடு, இராணுவ பஸ்ஸுக்கு தீ வைத்ததையும் விசாரணை அதிகாரிகளிடம் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

கைதான நபர் மஹியங்கனை பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுபிரிவினர்மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துவருகின்றமைகுறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# 3 வருடங்களில் 9 ஆயிரத்து 700 பேர் தற்கொலை

# தொழிலின்மை, பொருளாதார நெருக்கடி காரணம்

## பேராதனை பல்கலைக்கழக ஆய்வில் தகவல்

இலங்கையில் 4 மணித்தியாலத்துக்கு ஒருவர்என்றஅடிப்படையில்நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர் என பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொள்பவர்களில் 40 வீதமானோர் கல்வி கற்றவர்கள் எனவும் அவர்களுள் 22 பேர் பட்டப்படிப்பை முடித்தவர்கள் எனவும் குறித்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. நாட்டில் பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொள்வோர் தொடர்பான செய்திகள் அண்மை நாள்களில் அதிகளவில் பதிவாகியுள்ளன.

தனிநபர்கள் தற்கொலை செய்து கொள்வதுடன் சில சந்தர்ப்பங்களில் குடும்பமாகவும் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந் நிலையில் இது தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வுகளின் போது தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கைதற்போதுசடுதியாகஅதிகரித்து வருகின்றமைவெளிக்கொணரப்பட்டுள்ளது.

நாட்டில் தற்கொலை செய்துக்கொள்ளும் தரப்பினரின் எண்ணிக்கை வருடமொன்றுக்கு 10 வீதத்தால் தொடர்ச்சியாக அதிகரித்துவருவதாகவும்வருடமொன்றுக்கு 3000 இற்கும் அதிகமானோர் தற்கொலை செய்துகொள்கின்றனர்எனவும்பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

கடந்த 3 வருடங்களில் மாத்திரம் 9 ஆயிரத்து 700 தற்கொலைசம்பவங்கள்பதிவாகியுள்ளன. கடந்த வருடத்தில் மாத்திரம் 3 ஆயிரத்து 406 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன் அந்த எண்ணிக்கை அதற்கு முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

மேலும் தற்கொலை செய்துகொண்டவர்களில் நூற்றுக்கு 83 வீதமான ஆண்களும், 17 வீதமான பெண்களும் உள்ளடங்குகின்றனர். தற்கொலை செய்துகொண்டவர்கள் கல்வி கற்ற தரப்பினர் என்பதுடன்உயிரிழந்தவர்களில்40வீதமானவர்கள்சாதாரணதரத்தில்சித்தி அடைந்து உயர்தரத்தில் கல்வி கற்றவர்களாவர்.

இதேவேளை தற்கொலை செய்து கொண்டவர்களில் 22 வீதம் பேர் பட்டப்படிப்பை முடித்துள்ளனர். தற்கொலை செய்துகொண்டவர்களில் 35 வீதமானவர்கள் வேலையில்லாதவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொழில் செய்வோர்களில் விவசாயத்தில் ஈடுபடும் தரப்பினர் இந்த தற்கொலை முயற்சிகளில் அதிகம் ஈடுபட்டுள்ளனர். மேலும் இலங்கையை பொறுத்தமட்டில் 4 மணித்தியாலங்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தற்கொலை எண்ணிக்கை அதிகரிக்கலாம். - என்றார்.

இதேவேளை இது தொடர்பில் மனநல விசேட வைத்திய நிபுணர் ரூமி ரூபன் கருத்து தெரிவிக்கையில் -

பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே அதிகளவிலான தற்கொலை சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறு செய்வது சட்டப்படி குற்றம் என்றாலும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை விடுத்து தற்கொலை முயற்சியில் ஈடுபடும் தரப்பினரை அடையாளம் கண்டு அவர்கள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும். இதன் மூலமாகவே இந்த மரணங்களை தடுக்க முடியும்.

ஒருவர் மன ரீதியாக பாதிக்கப்பட்ட நிலையில் அவர் மனநோயாளர் என அடையாளம் காணப்படாமையே இந்த நிலைக்கு மற்றுமொரு காரணமாகும். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு முறையாக சிகிச்சை வழங்கப்படாமையும் இதற்குக் காரணமாக அமைய முடியும்.

ஒருவர் பொருளாதார ரீதியாக அல்லது மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தான் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக கூறும் போது பலர் இதனைக் கருத்திக்கொள்வதில்லை.

அவர்கள் கூறும் விடயங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

தற்கொலை செய்யப் போவதாக கூறும் ஒருவருக்கும் நாம் உதவிகளை செய்வதில்லை. பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது? மன அழுத்தத்தை எவ்வாறுஇல்லாமல்செய்வதுபோன்றுநாம் கவனம் செலுத்தும் போது தற்கொலைகள் இடம்பெறுவதை குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டார். (05)

# பொறுப்பற்று செயற்படும் அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை வரும்

## ஆளும் கட்சி எம்.பி. ரோஹித எச்சரிக்கை



அமைச்சரவை அமைச்சர்கள் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகநம்பிக்கையில்லா பிரேரணையைநாங்கள் கொண்டு வருவோம். ஒருசில அமைச்சர்கள் பொறுப்புக்களை மறந்து எதிர்கால அரசியல் வலுப்படுத்திக் கொள்ள அதிக கவனம் செலுத்தியுள்ளார்கள் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுவர்தன தெரிவித்தார்.

நாவல பகுதியில்இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கையில்மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல பொறுப்புக் கூற வேண்டியதில்லை. அரசஅதிகாரிகளின் பொறுப்பற்றசெயற்பாடுகளால் மருந்து தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியினர் குறுகியஅரசியல்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நம்பிக்கையில்லாபிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்து,பிரேரணையைத் தோற்கடிப்போம்.

சுகாதாரத்துறை அமைச்சர்தனக்குவழங்கப்பட்டுள்ள பொறுப்பினை முறையாக செயற்படுத்தியுள்ளார்.

அமைச்சரவைஅமைச்சர்களில் ஒரு சிலர் ஏதோ உயர்இடத்தில்இருப்பதை போல்எண்ணிக்கொண்டு பொறுப்பற்ற வகையில் செயற்படுகிறார்கள்.

வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை முறையாக செயற்படுத்தாமல் தங்களின் எதிர்கால அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்ள அதிக கவனம்செலுத்தியுள்ளார்கள்.

பொறுப்பற்ற வகையில் செயற்படும் அமைச்சர்களுக்கு எதிராக நாங்களே நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவோம். ஆகவே அமைச்சர்கள் முறையாக செயற்படவேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக்கொள்கிறோம். இது தற்காலிக அரசாங்கமே தவிர நிலையான அரசாங்கமல்ல என்பதை அமைச்சரவை அமைச்சர்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். - என்றார். (05)

# சுற்றுலாவிடுதி உரிமையாளரை கூரிய ஆயுதத்தால் தாக்கிய எகிப்து பிரஜை தற்கொலைக்கு முயற்சி!

## வெலிகம பகுதியில் சம்பவம்

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்பல்கம, குருந்துவத்த பிரதேசத்தில் சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த எகிப்திய சுற்றுலாப் பயணி ஒருவர் சுற்றுலா விடுதியின் உரிமையாளரை கூரிய ஆயுதத்தால் தாக்கி, குறித்த அறைக்கு தீ வைத்துவிட்டு தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துள்ளார் என வெலிகமபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

33 வயதான எகிப்திய சுற்றுலாப் பயணி மூன்று வருடங்களாக இந்த சுற்றுலா விடுதியில் தங்கியிருந்தார் எனவும் சுமார் ஒரு மாத காலமாக விடுதிக்கு செலுத்தவேண்டிய பணத்தை அவர் செலுத்தத் தவறியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சுற்றுலா பயணியிடம், விடுதிக்கானகட்டணத்தைசெலுத்துமாறு உரிமையாளர் கோரிக்கை விடுத்துள்ள சந்தர்ப்பத்தில் இவர்களுக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது கோபமடைந்த சுற்றுலா பயணி ஹோட்டல் உரிமையாளரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். பின்னர் தான் தங்கியிருந்த அறைக்குள் எரிவாயு சிலிண்டரை வீசிவிட்டு, தீ வைத்து தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். எவ்வாறாயினும் காயமடைந்த சுற்றுலா பயணியை மீட்ட பொலிஸார் உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். தீப் பரவல் காரணமாக விடுதியின் அறைகளுக்கும், சொத்துகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் சுற்றுலாப்பயணி கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம் பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)



# சேற்றில் புதைந்து உயிருக்குப் போராடும் யானை மீட்கும் பணிகள் தீவிரம்; வவுனியாவில் சம்பவம்

வவுனியா மாமடு குளத்தின் நீரேந்து பகுதியில் 5 வயது மதிக்கத்தக்க யானையொன்று சேற்றினுள் புதையுண்டநிலையில், அதனைமீட்கும் நடவடிக்கையினை முன்னெடுத்து வருவதாகவனஜீவராசிகள்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது -

வவுனியாமாமடுகுளத்தின்நீரேந்து பகுதியில் மாடு மேய்க்க சென்ற கிராம வாசி ஒருவர், சேற்றில் புதையுண்ட நிலையில் யானை ஒன்று உயிருக்குப் போராடுவதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து மாமடு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன், யானையை மீட்பதற்கான நடவடிக்கையில்வனஜீவராசிகள்திணைக்களம், பொலிஸார் மற்றும் கிராம மக்கள் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர். (05)

# மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் நாவலபிட்டி முதியவர் சாவு

மண்மேடுசரிந்துவீழ்ந்ததில்62வயதான நபர்ஒருவர்உயிரிழந்தசம்பவம்நாவலப்பிட்டி மாகும்புர பகுதியில் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

புதிதாக மதில் நிர்மாணிப்பதற்காக அத்திபாரம்வெட்டும்பணியில்ஈடுபட்டிருந்தபோதே முதியவர் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதில் படுகாயமடைந்த முதியவர், நாவலப்பிட்டிவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையிலேயே, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தமுதியவர்வேரலுகஸ்ஹின்ன பகுதியை சேர்ந்தவர் ஆவார்.

இந்நிலையில், சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (05)

# மரம் முறிந்து வீழ்ந்து 3 கார்களுக்குச் சேதம்

## ஜா-எல பகுதியில் சம்பவம்

காற்றுடன் கூடிய மழை காரணமாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஜா-எல பகுதியில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் 3 கார்களுக்கு சேதம் ஏற் பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தேவாலயமொன்றின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் மீதே மரம் முறிந்து வீழ்ந்துள்ளது.

மரம் முறிந்து விழுந்ததில் யாருக்கும் காயமோ, உயிரிழப்போ ஏற்படவில்லை என ஜா-எல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.09.2023இல் வெளியிடப்பெற்றது.